செ. கு. எண்: 122 நாள்: 17.07.2020

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் எடப்பாடி K. பழனிசாமி அவர்களின் அறிக்கை – 17.7.2020

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–13, பகுதி–40, கோட்டம்–173–க்குட்பட்ட சீனிவாசபுரத்தில் உள்ள தமிழ்நாடு குடிசை மாற்று வாரியக் குடியிருப்பில் வசித்து வரும் திரு. குபேந்திரன் என்பவர் வீட்டில், 15.7.2020 அன்று கழிவு நீர் தொட்டியில் ஏற்பட்டிருந்த அடைப்பைச் சரி செய்வதற்கு இறங்க முயன்ற போது, திரு. நாகராஜ் மற்றும் திரு. சயின்சா ஆகிய இரண்டு நபர்கள் விஷ வாயு தாக்கி உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகுந்த வேதனை அடைந்தேன்.

இச்சம்பவத்தில் உயிரிழந்த திரு. நாகராஜ் மற்றும் திரு. சயின்சா ஆகிய இரண்டு நபர்களின் குடும்பத்தினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தச் சம்பவத்திற்குக் காரணமான திரு. குபேந்திரன் என்பவர் மீது சட்டப்படி கடும் நடவடிக்கை எடுக்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

இந்தத் துயரச் சம்பவத்தில் உயிரிழந்த இரண்டு நபர்களின் குடும்பத்திற்கு தலா பத்து லட்சம் ரூபாய் வழங்க தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு நான் உத்தரவிட்டுள்ளேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9